# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 357 /பேரூ/2025**
**நாள் : 13.01.2026**

ப. ஜெகதீஸ்,
கொளப்பலூர்,
ஈரோடு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கொளப்பலூர் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம். - எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொளப்பலூர் அஞ்சல் , 607, ஜி.டி. ரோடு, என்ற முகவரியை சேர்ந்த திரு. ப. ஜெகதீஸ் என்பவரது 03.09.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.09.2025 அன்று பெறப்பட்டு, 357/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொளப்பலூர் அஞ்சல், 607, ஜி.டி. ரோடு என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. ப. ஜெகதீஸ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 03.09.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“ஈரோடு மாவட்டம், கொளப்பலூர் பேரூராட்சிக்குட்பட்ட 15-வது வார்டு நாகப்பகவுண்டனூர் பகுதியில் 80-க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவரும் நிலையிலும், 80-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பேரூராட்சிக்கு சொத்து வரி செலுத்துபவர்களாகவும், 150-க்கு மேற்பட்ட நபர்கள் வாக்குரிமை பெற்றவர்களாகவும் உள்ள நிலையில், எங்கள் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்கள் W.P. 13809/2023 CONP 1940/2023, W.P.175/2024. W.P. 34051/2024, W.P. 24422/2024 ஆகிய வழக்குகள்

தாக்கல் செய்யப்பட்டு வருவாய் துறைக்கு சொந்தமான ஆக்கிரமிப்புகள் நீதிமன்ற உத்தரவின்படி அகற்றப்பட்டு அடிப்படை வசதிகள் வேண்டி தற்பொழுது வழக்கு எண். W.P. 24422/2024 நிலுவையில் உள்ள நிலையில் கொளப்பலூர் பேரூராட்சி அதிகாரிகள் கோபி – தாராபுரம் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து எங்கள் கிராமத்திற்கு சாலை வசதி செய்து கொடுப்பதில் வருவாய் துறைக்கு சொந்தமான பல்லவாரியில் இணைப்பு பாலம் அமைக்க வேண்டியுள்ளதால் வருவாய்த் துறையின் தடையின்மை சான்று கிடைக்கப் பெற்றவுடன் இணைப்பு பாலம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்கள்.

இந்த நிலையில் கொளப்பலூர் பேரூராட்சி பகுதியில் வருவாய் துறைக்குச் சொந்தமான பல்வேறு இடங்களில் வருவாய்த் துறையின் முன் அனுமதி அல்லது தடையின்மைச் சான்று ஆவணங்கள் வருவாய்த்துறை அதிகாரிகளிடம் பெறாமல் பல்வேறு திட்ட பணிகள் அரசிடமிருந்து நிதி பெறப்பட்டு (சமுதாயக்கூடம், கழிவறை, தார் சாலை, நூலகம், மயானம், சின்டெக்ஸ் டேங்க் மேடை, திடக்கழிவு மேலாண்மை வளம் மீட்பு பூங்கா) போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் எங்கள் கிராம மக்களுக்கு இணைப்பு பாலம் அமைக்க வருவாய்த் துறைக்கு சொந்தமான இடமாக உள்ளதால் வருவாய்த் துறையின் முன் அனுமதி கடிதம் அல்லது தடையின்மை சான்று கிடைக்கப்பெற்ற உடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடுவது மக்களை வஞ்சிக்கும் செயலாக உள்ளது.

கொளப்பலூர் பேரூராட்சிக்குட்பட்ட 15வது வார்டு நாகப்பகவுண்டனூர் பகுதிக்கு அடிப்படை வசதிகளான சாலை, சாக்கடை, மயானம், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.175/2024 மற்றும் W.P.24422/2024 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் நீதிமன்றத்தில் எதிர்வாதுரையாக அடிப்படை வசதிகளில் ஒன்றான மயானம் அமைப்பதற்கான இடம் கொளப்பலூர் பேரூராட்சிக்குட்பட்ட மோளகவுண்டம்பாளையத்தில் கொளப்பலூர் புல எண். 632/1 மற்றும் 632/2 புல எண்களில் மயானம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக எதிர்வாதுரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் கிராம மக்களிடம் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்படாமல் 15 வார்டு கவுன்சிலர்களும் எந்த ஒரு முன் அறிவிப்பும் பொதுமக்களுக்கு தெரிவிக்காமலும் 15 வார்டு கவுன்சிலர்களும் 29.11.2024 மற்றும் 31.01.2025 ஆகிய தேதிகளில் மயானம் அமைக்க கொளப்பலூர் பேரூராட்சி 15 வார்டு கவுன்சிலர்களும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றிய நிலையில் நான் கொளப்பலூர் பேரூராட்சி 15வது வார்டு நாகப்பகவுண்டனூர் பகுதிக்கு அடிப்படை வசதிகள் வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண்களை பயன்படுத்தி தமிழ்நாடு அரசிடம் இருந்து ரூ.1,73,00,000 தொகையினை மயானம் அமைப்பதற்காக பெறப்பட்ட நிலையில் மயானம் அமைக்க பூமி பூஜை செய்வதற்கு முன்பு அதாவது தமிழ்நாடு அரசிடம் முறையாக நிதி பெறுவதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டதுடன் அதற்கான ஒப்புதலும் பெறப்பட்டு மயானம் அமைப்பதற்கான கட்டிட ஒப்பந்ததாரரும் தேர்வு செய்யப்பட்ட நிலையில் வார்டு கவுன்சிலர்கள் இடையே கருத்து வேறுபாடு காரணமாகவும், கவுன்சிலர்களின் சுயலாபத்திற்காகவும் பல்வேறு தவறான தகவல்களை பொதுமக்களிடையே தெரிவித்து மயானம் அமைவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு இருந்த நிலையில் கடந்த 30.06.2025 தேதியில் நடத்தப்பட்ட தீர்மான கூட்டத்தில் 09 வார்டு கவுன்சிலர்கள் மயானம் அமைக்க ஆதரவு தெரிவித்த நிலையில், 06 வார்டு கவுன்சிலர்கள் மயானம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்தது முற்றிலும் முரண்பாடான தகவல்கள் தெரிவித்துள்ளதால் இது தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொண்டு இரண்டு தீர்மானங்களுக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு பின்பு பொது மக்களிடையே தவறான தகவல்களை பரப்பி மயானம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்த வார்டு கவுன்சிலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும்

அத்துடன் கடந்த 11.08.2025ஆம் நாள் கொளப்பலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட 13 வார்டு கவுன்சிலர்கள் கொளப்பலூர் பேரூராட்சி மன்ற தலைவருக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வருவதற்காக ஈரோடு மாவட்டம் உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் மனு வழங்கப்பட்டுள்ள நிலையில் வார்டு கவுன்சிலர்களின் சுய லாபத்திற்காக பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே அவரவர் சொந்த ஆதாயத்திற்காக தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிப்பதும் பின்பு ஒப்புதலுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதும் தொடர்கதை ஆகி வருவதாலும் பொதுமக்களிடையே மிகுந்த அதிருப்தி ஏற்படுத்தியுள்ளதாலும் உரிய விசாரணை மேற்கொண்டு நிர்வாக முறைகேடு தொடர்பாக உயர் அதிகாரிகளை கொண்டு ஆய்வு செய்து தவறு செய்த உறுப்பினர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

அத்துடன் மயானம் எதிர்ப்பு போராட்ட குழு மூலமாக பொதுமக்களிடையே நிதி வசூலிக்கப்பட்டு போராட்டங்கள் பல்வேறு கட்டங்களாக நடத்தப்பட்ட நிலையில் பொதுமக்களிடம் வசூலிக்கப்பட்ட நிதி ரொக்கமாகவும், UPI, G Pay, Phonepe மூலமாகவும் பொதுமக்களிடம் வசூலிக்கப்பட்ட நிதியினை கணக்கில் காண்பிக்காமல் நிதி மோசடி செய்துள்ளதால் நிதி வசூலித்த நபர்கள் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த நபர்களின் வங்கிக் கணக்குகளை ஆய்வு செய்து உரிய விசாரணை மேற்கொண்டு சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ள தங்களை தாழ்மையுடன் வேண்டி கேட்டுக் கொள்கின்றேன்." என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.10.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 11.11.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 262/2025ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

<u>புகார் மனு பத்தி - 1 இணைப்பு பாலம் அமைப்பது சம்பந்தமாக</u>

மனுதாரர் கோரியுள்ளவாறு இணைப்பு பாலம் அமைக்கப்பட வேண்டிய (சர்வே எண். 671 மற்றும் 685) இடமானது வருவாய்த் துறை ஆவணங்களில் வாரிப்புறம்போக்கு என்ற வகைப்பாட்டில் உள்ளது. இந்த இடமானது வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடம் என்பதால், பேரூராட்சி மூலம் பாலம் கட்டுவதற்கு கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலர் கடித ந.க. எண். 122/2023 நாள் 11.07.2024-ல் வருவாய்த் துறையினரின் ஆட்சேபனையின்மை சான்று வழங்க பேரூராட்சி அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டது. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம் அவர்களின் கடித ந.க. எண். 3962/2024/அ4, நாள் 18.09.2024ன்படி சிறுபாலம் அமைக்க பரிந்துரை செய்து சார் ஆட்சியர், கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு அனுப்பப்பட்டதை தொடர்ந்து சார் ஆட்சியர், கோபிசெட்டிபாளையம் அவர்களின் கடித ந.க. எண். 6193/2024/அ1, நாள் 17.10.2024ன்படி சிறுபாலம் அமைக்க பரிந்துரை செய்து ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. மேலும் வருவாய்த் துறையினரிடமிருந்து ஆட்சேபனையின்மை சான்று கிடைக்கப் பெற்ற உடன் இணைப்பு பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. மேலும் வருவாய்த் துறையினரிடமிருந்து ஆட்சேபனையின்மை சான்று பெற துரித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கொளப்பலூர் பேரூராட்சி 15வது வார்டு பகுதியில் இணைப்பு பாலம் அமைக்க தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலர் ந.க. எண். 122/2023,

நாள் 03.10.2024ன்படி 15வது வார்டு நாகப்பகவுண்டனூர் பகுதியில் கிராம வாரிப்புறம்போக்கு சர்வே எண். 671 மற்றும் 685ல் சிறுபாலம் அமைக்க ஏதுவாக உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு பாசன உபகோட்டம் கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் கருத்துரை வழங்க கோரியமைக்கு மேற்படி உதவி பொறியாளர் நீர்வளத் துறை பாசன உபகோட்டம் கோபிசெட்டிபாளையம் அவர்களின் கடித எண். கோ.41/2024 நாள் 07.10.2024-ல் சிறுபாலம் அமைக்க தெரிவிக்கும் இடமானது இந்த உபகோட்டத்தை சார்ந்தது அல்ல எனவும், இந்த உப கோட்டக் கட்டுப்பாட்டில் கொளப்பலூர் ஏரி மட்டும் உள்ளது எனவும், கொளப்பலூர் பேரூராட்சியானது இந்த உபகோட்ட கட்டுப்பாட்டில் இல்லை என தெரிவித்துள்ளார்.

புகார் மனு பத்தி – 2

மனுதாரர் தனது புகார் மனுவில் சில இடங்களில் வருவாய்த் துறையினரின் அனுமதி பெறாமல், சமுதாயக்கூடம், கழிவறை, தார்சாலை, நூலகம், மயானம், சின்டெக்ஸ் டேங்க் மேடை, திடக்கழிவு மேலாண்மை வளம் மீட்பு பூங்கா பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், அதே போன்று கொளப்பலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட 15வது வார்டு பகுதியில் வருவாய்த் துறையினரின் அனுமதியில்லாமலேயே இணைப்பு பாலம் அமைக்க கோரியுள்ளார். அரசு திட்டங்கள் அனைத்தும் உரிய துறையினரிடமிருந்து அனுமதி பெற்ற பிறகே செயல்படுத்தப்பட வேண்டும். எனவே வருவாய்த் துறையினரின் அனுமதி பெற்ற பிறகே செயல்படுத்தப்பட வேண்டும். எனவே வருவாய்த் துறையினரின் அனுமதியில்லாமல் பாலம் கட்ட இயலாது. வருவாய்த் துறையினரிடமிருந்து ஆட்சேபனையின்மை சான்று பெற துரித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

புகார் மனு பத்தி – 3,4 மற்றும் 5 மயான வசதி கோரியது

மனுதாரர் மயானம் அமைப்பது தொடர்பாக தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு கொளப்பலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட 15வது வார்டு, நாகப்பகவுண்டனூர் பகுதிக்கு நவீன தகன எரிவாயு மேடை அமைக்க இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 120(7), நாள் 31.01.2025ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சென்னை பேரூராட்சிகளின் ஆணையர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள் ஆணைந.க. எண். 91/2025/ஆ4, நாள் 11.04.2025-ல் கொளப்பலூர் பேரூராட்சியில் Construction of LPG Gasifier Crematorium in Molagoundanpalayam Ward No. 15. SF No. 15, SF No. 632/1 ரூ.173 இலட்சம் நிர்வாக அனுமதி அளித்துள்ளார். மேற்கண்ட இடத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைப்பதற்கு பொதுமக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு, சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டது. இதுகுறித்து 02.07.2025 மற்றும் 12.08.2025ல் சுமூக பேச்சுவார்த்தை நடைபெற்றது. கொளப்பலூர் பேரூராட்சியின் 15வது வார்டு மோளகவுண்டன்பாளையம் சர்வே எண். 632/1-ல் LPG Gasifier Crematorium அமைத்தல் (மதிப்பீடு ரூ.173 இலட்சம்) பணி மேற்கொள்ள இரண்டாம் கட்டமாக இத்திட்டத்தின் அனைத்து பயன்பாடுகள் குறித்தும் பொதுமக்களிடம் அலுவலர்களால் எடுத்துரைக்கப்பட்டது. அரசு திட்டம் என்பதால் முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும் எனவும், வருங்காலங்களில் நிலப்பற்றாக்குறை மற்றும் இதர பிரச்சனைகளை தவிர்க்கும் பொருட்டு நீண்டகால தொலைநோக்கு பார்வையுடன் கூடிய திட்டம் என்பதாலும், எரிவாயு தகன மேடை அமைக்கப்படுவதன் அத்தியாவசிய தேவையை குறித்தும், முக்கியத்துவத்தை குறித்தும் அறிந்துகொள்ள ஏதுவாக அருகில் கோபிசெட்டிபாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள எரிவாயு தகன மேடையை நேரில் சென்று பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் எரிதகன மேடை அமைக்கப்படுவதால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பேணப்படுதல் போன்ற நன்மைகள் உள்ளதாலும், பொருளாதார

நிலையில் பின் தங்கியுள்ள கிராம மக்களின் ஈமச்சடங்கு செலவினங்கள் மிகவும் குறையும் என்பதாலும், இத்திட்டத்திற்காக அரசு இப்பேரூராட்சிக்கென திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாலும், மயான வகைபாடு மற்றும் ஏற்கனவே மயானமாக பயன்பாட்டில் உள்ள இடத்தில் மட்டுமே அமைக்கப்படுவதாலும், இதனால் பொதுமக்களுக்கு இடையூறு ஏதும் இல்லை என்பதாலும், பேரூராட்சிக்கு இதன்மூலம் கூடுதல் வருவாய் ஏற்படும் என்பதாலும், இத்திட்டத்தை செயல்படுத்தலாம் என பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர், கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலர், கோபிசெட்டிபாளையம் வருவாய் வட்டாட்சியர், கொளப்பலூர் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களால் மீள எடுத்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில், பொதுமக்கள் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, முதற்கட்ட பேச்சுவார்த்தையின் போது திட்டப் பணியினை ரத்து செய்து மன்றத் தீர்மானம் இயற்றப்பட கோரியது குறித்தும், தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு இப்பணியினை தொடர மீண்டும் முயற்சி எடுக்க வேண்டாம் எனவும், தங்களுக்கு கொளப்பலூர் பகுதியில் எரிவாயு தகன மேடை அமைக்க வேண்டாம் எனவும் வலுவான கடுமையாக ஆட்சேபனையினை தெரிவித்தனர்.

கொளப்பலூர் பொதுமக்களாகிய நாங்கள் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள எரிவாயு தகன மேடையை பயன்படுத்திக்கொள்கிறோம். கொளப்பலூருக்கென தனியே எரிவாயு தகன மேடை அமைக்க வேண்டாம் என மீண்டும் வலியுறுத்தி எதிர்ப்பு தெரிவித்தனர்.

எரிவாயு தகன மேடை திட்டத்தை தங்கள் பகுதியில் செயல்படுத்துவதால் பொது மக்களுக்கு இருக்கும் வாழ்வாதார சிக்கல்கள், சட்டம் ஒழுங்கு மற்றும் இன்னும் பல இடர்பாடுகளை முன் வைத்து பொதுமக்களின் ஒருமித்த கருத்தாக எரிவாயு தகன மேடை திட்டத்தை ரத்து செய்ய வேண்டி, கொளப்பலூர் பேரூராட்சி 15வது வார்டு மன்ற உறுப்பினர் திருமதி. அருள்மொழி மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பாக ஆட்சேபனை மனுவை செயல் அலுவலரிடம் ஒப்படைத்தனர்.

இதனை தொடர்ந்து கொளப்பலூர் பொதுமக்களின் தொடர் எதிர்ப்பு காரணமாகவும், பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண். 195, நாள் 10.07.2025ன் அடிப்படையிலும், கொளப்பலூர் பேரூராட்சி 2025-26ஆம் ஆண்டு (KNMT) கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 15வது வார்டு மோளகவுண்டன்பாளையம் சர்வே எண். 632/1-ல் LPG Gasifier Crematorium அமைக்கும் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள இயலவில்லை என்ற விபரத்தினை செயல் அலுவலர், கொளப்பலூர் முதல்நிலை பேரூராட்சி, ஈரோடு மாவட்டம் அவர்கள் தனது கடித ந.க.எண். 35/2024, நாள் 04.09.2025-ல் ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வழியாக ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட செயற்குறிப்பு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கடித ந.க.எண். 29353/2025/U1 நாள் 23.09.2025ன்படி சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கையில் உள்ளது.

<u>புகார் மனு பத்தி – 6</u>

மனுதாரர் தனது புகார் மனுவில் பொதுமக்களிடையே நிதி வசூலிக்கப்பட்டு, மேற்படி நிதியினை கணக்கில் காட்டாமல் நிதி மோசடி செய்துள்ளதாகவும், நிதி வசூலித்த நபர்கள் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள புகார் தெரிவித்துள்ளார். கொளப்பலூர் பேரூராட்சியில் பணிபுரியும் எந்தவொரு அலுவலர்களும் எவரிடமும் பணம் வசூலிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன். " என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகார் மனு மற்றும் கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டம், கொளப்பலூர் என்ற இடத்தைச் சார்ந்த முறையீட்டு மனுதாரர் திரு. ப. ஜெகதீஸ் என்பவர் தனது 03.09.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் ஈரோடு மாவட்டம், கொளப்பலூர் பேரூராட்சியில் வருவாய்த் துறைக்கு சொந்தமான இடங்களில் வருவாய்த் துறையின் அனுமதியின்றி பேரூராட்சியினரால் முறைகேடாக சமுதாயக்கூடம், கழிவறை, தார்சாலை, நூலகம், மயானம், சின்டெக்ஸ் மேடை, திடக்கழிவு மேலாண்மை வளம் மீட்பு பூங்கா போன்ற திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது என புகார் தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சியில் மயானம் அமைப்பது தொடர்பாக மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், சில வார்டு உறுப்பினர்கள் மயானம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து, பொது மக்களிடமிருந்து நிதி வசூல் செய்து முறைகேடு செய்துள்ளனர் எனவும் புகாராக தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர் தனது மனுவில் நாகப்பகவுண்டனூர் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டி மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு (W.P. No. 24422/2024) தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் நாகப்பகவுண்டனூர் கிராமத்தில் மயானம் அமைக்கக் கோரும் கோரிக்கையும் ஒன்றாகும். இதே பொருள் தொடர்பாக மனுதாரர் தனது 03.09.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் மயானம் அமைப்பது குறித்து கோரிக்கையாக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள மயானம் அமைப்பது தொடர்பான பொருள் குறித்து மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W.P. No.24422/2024) தொடுத்து அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதை மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற இணையதளம் வாயிலாகவும் தெரிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) Xxxxxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act 1952 or any matter pending before a Court.

இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் மயானம் அமைப்பது தொடர்பாக மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண். (W.P.No. 24422/2024) தொடரப்பட்டு, அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)-ன்படி மனுதாரரின் 03.09.2025 நாளிட்ட புகார் மனுவினை விசாரிக்க இயலாது என்பதால்,

இப்புகார் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஜனவரி 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. ப. ஜெகதீஸ்,
த/பெ. N.N. பழனிச்சாமி,
607, ஜி.டி.ரோடு,
கொளப்பலூர் அஞ்சல்,
கோபிசெட்டிபாளையம் வட்டம்,
ஈரோடு மாவட்டம் - 638 456.

2. செயல் அலுவலர்,
கொளப்பலூர் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/1/26

செயலாளர்

19/01/26